# உங்கள் அன்புக்குரியவருக்கு எமது அன்பளிப்பு

## நீங்கள் அதிகமாக விரும்பும் இடத்திற்கு உங்களுடன் செல்பவருக்கு இலவச பயணச்சீட்டு

அன்பிற்கினிய ஒருவருடன் சேர்ந்து பயணம் செய்வதில் இன்பம் காணும் உங்களுக்கே இந்த வசதி... புதிய இடங்களுக்குக் கூட்டாகச் சென்று புதிய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள்.

உங்கள் அடுத்த வெளிநாட்டுப் பயணத்தில் உங்கள் அன்பிற்குரிய ஒருவரும் சேர்ந்துகொள்வதை, HSBC வீசா சிக்னேச்சர் கிறெடிட் கார்ட் உறுதிப்படுத்தும். நீங்கள் வெளிநாடு செல்லும் வேளைகளில் உங்கள் அன்புக்குரியவரைப் பிரிந்திருப்பது எவ்வளவு கடினம் அல்லவா? அதனால்தான், அந்த விசேட நபரையும் உங்களுடன் அழைத்துச்செல்ல நாம் வாய்ப்பளிக்கிறோம்.

உங்கள் கிறெடிட் கார்ட்டை, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஒரு தொகைக்கு வருடம் முழுவதும் ஸ்வைப் செய்யுங்கள். உங்களுடன் பயணம் செய்பவருக்கான மேலதிக விமானச்சீட்டை நாம் ஒதுக்குவோம்.

இந்த ஆவணத்தின் ஆங்கில அல்லது சிங்கள பிரதி உங்களுக்குத் தேவைப்படின், தயவுசெய்து www.hsbc.lk என்ற எமது இணையத்தளத்தை நாடவும். அல்லது எமது கிளையொன்றில் கேட்டுப் பெறவும்.

HSBC வீசா சிக்னேச்சர் (Visa Signature) கிறெடிட் கார்ட் வைத்திருப்பவர்கள் தமது கிறெடிட் கார்ட்களைத் தொடர்ச்சியாக 12 மாதங்களுக்கு* பயன்படுத்துவதுடன் பிரதான கார்ட்டின் பேரில் பின்வரும் முறையில் குறைந்தபட்ச செலவைப் பேணி வந்தால், உடன் செல்பவருக்கான ஓர் இலவச விமானச்சீட்டிற்குத் தகுதி பெறுவார்கள்:

**12 தொடர்ச்சியான மாதங்களுக்கு* ரூ.150,000/- செலவு** - இந்தியா (சென்னை|பங்களூர்), சிங்கப்பூர், டுபாய், மாலைதீவு, மலேசியா, பாங்கொக் அல்லது ஜகார்த்தாவுக்கு சிக்கன வகுப்பு விமானச்சீட்டு.

**12 தொடர்ச்சியான மாதங்களுக்கு* ரூ.300,000/- செலவு** – லண்டன், பரிஸ், கென்யா, ஐக்கிய அமெரிக்கா (நியூயோர்க்), தென்னாபிரிக்கா (யொஹனஸ்பேர்க்), அவுஸ்திரேலியா (மெல்போர்ண்), நியூசிலாந்து (ஒக்லண்ட்), ஹொங்கொங் அல்லது சீனாவுக்கு (பெய்ஜிங்) சிக்கன வகுப்பு விமானச்சீட்டு.

*12 தொடர்ச்சியான மாதங்கள் கார்ட் செயற்படுத்தப்பட்ட திகதியிலிருந்து கணிக்கப்படும். கிறெடிட் கார்ட் 2015 டிசெம்பர் 31இல் அல்லது அதற்கு முன் செயற்படுத்தப்பட வேண்டும்.

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

01. ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்டின் (இனிமேல் “வங்கி” என்று அழைக்கப்படும்) உடன் செல்பவர்களுக்கான இலவச விமானச்சீட்டு வழங்கலில் (இனிமேல் “வழங்கல: என்று அழைக்கப்படும்) தற்போது இலங்கையில் வசிக்கும் HSBC வீசா சிக்னேச்சர் கிறெடிட் கார்ட் வைத்திருப்பவர்கள் (“கார்ட் வைத்திருப்பவர்கள்”) அனைவரும் பங்குபற்றலாம்.

02. இந்த வழங்கலின் கீழ், கார்ட் வைத்திருப்பவர் தனது கிறெடிட் கார்ட்டை, அது செயற்படுத்தப்பட்ட திகதியிலிருந்து (கார்ட்டின் செயற்படுத்தல் 2017 டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்) 12 மாதங்களுக்கு தொடர்ச்சியாகப் பயன்படுத்தி, பின்வரும் குறைந்தபட்ச செலவைச் செய்திருந்தால், எமது பங்காளி விமான சேவைகளில் (கத்தே பசிபிக் | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் | கட்டார் எயார்வேய்ஸ் | சிங்கப்பூர் எயார்லைன்ஸ்) ஒன்றிடமிருந்து இங்குள்ள சரத்து 2.1இல் அல்லது சரத்து 2.2இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு சேரிடத்திற்கு விமானச்சீட்டைக் கொள்வனவு செய்யும்போது தன்னுடன் செல்பவருக்கான இலவச விமானச்சீட்டைப் பெற்றுக்கொள்ளத் தகுதி பெறுவார்.

2.1 பன்னிரண்டு (12) தொடர்ச்சியான மாதங்களுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் இலங்கை ரூபாய் (ரூ.150,000/- செலவு – கார்ட் வைத்திருப்பவர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சேரிடங்களில் ஒன்றிற்கு தன்னுடன் செல்பவருக்காக நாற்பதாயிரம் ரூபாய் (ரூ.40,000/-) பெறுமதியான இலவச விமானச்சீட்டைப் பெறுவதற்கு உரித்துடையவராவார். சேரிடங்கள்: சென்னை, பங்களூர், சிங்கப்பூர், டுபாய், மாலைதீவு, மலேசியா, பாங்கொக், ஜகார்த்தா.

2.1 பன்னிரண்டு (12) தொடர்ச்சியான மாதங்களுக்கு மூன்று இலட்சம் இலங்கை ரூபாய் (ரூ.300,000/- செலவு – கார்ட் வைத்திருப்பவர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சேரிடங்களில் ஒன்றிற்கு தன்னுடன் செல்பவருக்காக ஒரு இலட்சம் ரூபாய் (ரூ.100,000/-) பெறுமதியான இலவச விமானச்சீட்டைப் பெறுவதற்கு உரித்துடையவராவார். சேரிடங்கள்: லண்டன், பரிஸ், கென்யா, ஐக்கிய அமெரிக்கா (நியூயோர்க்), தென்னாபிரிக்கா (யொஹனஸ்பேர்க்), அவுஸ்திரேலியா (மெல்பேர்ண்), நியூசிலாந்து (ஓக்லன்ட்), ஹொங்கொங், சீனா (பெய்ஜிங்).

03. பிரதான கார்ட் வைப்பாளரின் மொத்தச் செலவின் பேரில் மட்டுமே இந்த வழங்கல் செல்லுபடியாகும்.

04. இந்த வழங்கலுக்குத் தகுதி பெறும் வேளையில் கார்ட் வைத்திருப்பவரின் கிறெடிட் கார்ட் கணக்கு எவ்வித நிலுவையும் அற்றதாகவும் ஒழுங்கானதாகவும் இருக்க வேண்டும்..

05. மேலே சரத்து 2இல் குறிப்பிடப்பட்டுள்ள செலவுக் கூறு பூர்த்தி செய்யப்பட்ட இரண்டு கலண்டர் மாதங்களுக்குள் தகுதியுள்ள கார்ட் வைத்திருப்பவர்கள விமானச்சீட்டு வழங்கப்பட வேண்டும்.

06. விமானச்சீட்டுத் திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் பயணம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

07. வங்கியானது தனது தனித் தற்றுணிபிற்கேற்ப எந்வொரு விமான சேவை நிறுவனத்திடமிருந்தும் விமானச்சீட்டைப் பெற்றுக்கொடுக்க உரிமை கொண்டுள்ளது.

08. சிக்கன வகுப்புப் பயணத்திற்கான இருவழி விமானச்சீட்டு வழங்கப்படும். இதில் ஹொட்டேல் மற்றும் தங்குமிட வசதி எதுவும் உள்ளடங்காது.

09. இந்த வழங்கல் தொடர்பாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் உட்பட சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் முழுமையாக அல்லது அவற்றில் எதையேனும் திருத்த, மாற்ற அல்லது வாபஸ் பெற வங்கி உரிமை கொண்டுள்ளது.

10. இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள எதனையும் இது போன்ற வழங்கல்களை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கான வாக்குறுதியாகவோ உதாரணமாகவோ கொள்ளக்கூடாது.

11. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக மற்றும்/அல்லது இந்த வழங்கல் தொடர்பான சகல விடயங்களிலும் ஏதேனும் சர்ச்சை எழுமாயின், வங்கியின் தீர்மானமே முடிவானதாக இருக்கும்.

12. இந்த வழங்கல் தொடர்பில் வங்கியானது ஒரு சேவை வழங்குநர் அல்ல என்பதால், மேற்குறிப்பிட்ட சேவைகளின் தரம் குறித்து எவ்வித பொறுப்பையும் ஏற்கவோ உத்தரவாதம் அல்லது வாக்குறுதியை வழங்கவோ மாட்டாது.

13. இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும்.

வெளியீடு: ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் - ஸ்ரீலங்கா.

CPD/VPC/WLC/V-2018.1